2004 நவம்பர் 18]

விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக இரண்டு பேருந்துகளும், அதைப்போல, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், குடந்தை கோட்டத்தின் மூலமாக இரண்டு பேருந்துகளும் இயக்கப்பட்டன. கடந்த ஓராண்டு காலமாக மூன்று பேருந்துகள் நிறுத்தப்பட்டு ஒரு பேருந்து மட்டுமே இயக்கப்படுகிறது. இதனால் பேராவூரணியிலிருந்து சென்னைக்கு வருவதற்கு அந்தப் பகுதியிலே இருக்கின்ற பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் நலன் கருதி நிறுத்தப்பட்ட அந்த மூன்று வழித்தடங்களை மீண்டும் இயக்க முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணியிலிருந்து சென்னைக்கு தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் இரண்டு பேருந்துகளை இயக்கி வருகின்றது. அதைப்போல, தமிழ்நாடு அரசு (கும்பகோணம்) போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக அங்கு மூன்று பேருந்துகள் இயக்கப்பட்டு வந்தன. ஆனால், இந்த நிலை சகோதரப் போக்குவரத்துக் கழகங்களுக்குள் தேவையில்லாமல் போட்டி மனப்பான்மையோடு வருவாய் இழப்பு ஏற்படக்கூடிய வகையிலே செயல்பட்டு, அப்படி இயக்கப்பட்டு வந்த அந்த வழித்தடங்களில் பெரும் இழப்பு ஏற்படுவது கண்டறியப்பட்டது. அதைச் சீரமைப்பதற்காகப் பல்வேறு ஆலோசனைக் கூட்டங்களை ஏற்பாடு செய்து, அதன்மூலமாக அந்தப் பகுதி மக்களுடைய போக்குவரத்து வசதி எந்தவிதத்திலும் பாதிக்காத வகையில், போதுமான அளவிற்கு அந்தப் பகுதிகளுடைய அடர்வுகளைக் கண்டறிந்து, அதற்கேற்ப தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலமாக இரண்டு பேருந்துகளை இயக்குவது என்று முடிவு செய்யப்பட்டு, அதன்மூலமாக தொடர்ந்து, அந்தப் பகுதி மக்களின் தேவைக்கேற்ப இரண்டு அரசு விரைவுப் பேருந்துகள் தினந்தோறும் நிறுத்தப்படாமல் சிறப்பாக இயக்கப்பட்டு வருகின்றன என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 38, திரு. இஏ. லியாவுதீன் சேட், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்

[2004 நவம்பர் 18

38—

பணிமனை

*** 28333—திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சியில் அரசுப் போக்குவரத்துப் பணிமனை கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சியில் அரசுப் போக்குவரத்துப் பணிமனை கட்டுவதற்கு அரசின் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான அரவக்குறிச்சியில், அரசுப் போக்குவரத்துப் பணிமனை கட்டுவதற்கு மறைந்த பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வராக இருந்தபோது நிலம் வாங்கப்பட்டுள்ளது. அரவக்குறிச்சி, தாலுகா தலைநகரானதாலும், அங்கு வட்டாட்சியர் அலுவலகம் போன்ற அரசு அலுவலகங்கள் இருப்பதாலும், பவித்திரம், புன்னம், அத்திப்பாளையம் போன்ற கிராமப் பகுதிகளிலிருந்து கிராமத்து மக்கள் வட்டாட்சியர் அலுவலகம் வந்து செல்ல மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அங்கு பணிமனை கட்டி, 10 பேருந்துகள் ஒதுக்கினால், அனைத்துக் கிராமப் பகுதி மக்களும் வந்து செல்வதற்கு பேருந்து வசதி ஏற்படும். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, இதை மறுபரிசீலனை செய்து அடுத்த நிதியாண்டில் கட்டித் தர முன்வருமா என தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, 29-8-1983 ஆம் ஆண்டு நமது புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே, அரவக்குறிச்சியிலே 2.5 ஏக்கர் நிலம், போக்குவரத்துக் கழகத்தின் தேவைக்காக, பணிமனை அமைப்பதற்காகக் கையகப்படுத்தப்பட்டது. ஆனால், அதற்குப் பின்பு, அந்தச் சூழ்நிலைகளை ஆய்வு செய்தபோது,*